ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

சுற்றறிக்கை இல : PS/EPC/Circular 06/2020
2020 சனவரி மாதம் 24 ஆந் திகதி

07 FEB 2020

District Director of Agriculture
10 FEB 2020
District Secretariat
Jaffna

செயலாளர், நிதி, பொருளாதார கொள்கைகள் அபிவிருத்தி அமைச்சு
செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
செயலாளர், மகாவலி விவசாய, நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு
செயலாளர், உள்ளக வர்த்தக, உணவு பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நலன்புரி அமைச்சு
செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும்
தலைவர், நெல் சந்தைப்படுத்தும் சபை

## 2019/20 பெரும்போகத்தில் நெல் கொள்வனவுக்கான துரித வேலைத்திட்டம்

2019/20 பெரும்போகத்தில் நெல் கொள்வனவு மற்றும் நெற் செய்கை விவசாயிகளுக்கான அரசின் உத்தரவாத விலைக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் போது தரமுள்ள ஒரு கிலோ கிராம் நெல்லுக்கு 50 ரூபாவுக்கான ஆகக் குறைந்தபட்ச விலையை வழங்க அரசு தீர்மானித்துள்ளது. அதன்படி அரசின் நெல் கொள்வனவு கொள்கைத் திட்டத்திற்கமைய இப்போகத்தில் நெல் கொள்வனவு நடவடிக்கைகளை துரிதமாக நடைமுறைப்படுத்த அதிமேதகு சனாதிபதி மற்றும் அமைச்சரவையினால் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வேலைத் திட்டம் மகாவலி விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருததி அமைச்சு மற்றும் உள்ளக வர்த்தக உணவுப் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நலன்புரி அமைச்சின் உதவியுடன் மாவட்ட செயலாளர்களினால் நெற் சந்தைப்படுத்தும் சபையின் மேற்பார்வையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும். இலங்கை இராணுவத்தினரும் நெல் கொள்வனவு நடவடிக்கைகளை துரிதப்படுத்த தமது பங்களிப்பினை வழங்குவார்கள். இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, சமுர்த்தி வங்கி மற்றும் கூட்டுறவு வங்கிகள் என்பன நெல் கொள்வனவு செய்யும் பிரதான நிதி வழங்குநர்களாக செயற்படுவார்கள்.

02. நெல் கொள்வனவு நடவடிக்கைகளுக்குள் மொத்த தொகை கையிருப்புகளை பொறுப்பேற்றல், களஞ்சியப்படுத்தல் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பேணுதல் மற்றும் கணக்குப் பதியுதல் தொடர்பான பொறுப்பு நெல் சந்தைப்படுத்தும் சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் குறிப்பிட்ட பிரதேச செயலாளர்களுக்கு ஒப்படைக்கப்படும். இவ்உத்தியோகத்தர்கள் இவ்வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்



ගාලු මුවදොර, කොළඹ 01
காலி முகத்திடல், கொழும்பு 01
Galle Face, Colombo 01
දුරකථන / தொலைபேசி / Telephones ++ 94 (0) 11 2354418 ++ 94 (0) 11 2473873
ෆැක්ස් / தொலைநகல் / Fax ++ 94 11 2446657
ඊ-තැපැල / மின்-அஞ்சல் / e-mail prsec@presidentsoffice.lk

போது பின்வரும் ஆலோசனைகளை பின்பற்ற வேண்டுமென்பதை அறிவித்துக் கொள்கின்றேன்.

2.1 2019/20 பெரும்போகத்தில் நெல் கொள்வனவுக்கான உத்தரவாத விலை

நெல் கொள்வனவு செய்யும் இடங்களுக்கு எடுத்து வரப்படும் நெல்லின் ஆகக் கூடிய ஈரலிப்பு 14% வீதமாகவும் ஆகக் கூடிய நெற் பதர் 9% மாகவும் அடங்கலாக உரிய தரத்தில் இருத்தல் வேண்டும். அந்தத் தரத்திற்குக் குறைவான மற்றும் ஈரலிப்புத் தன்மை 14% த்தைத் தாண்டும் மற்றும் 22% ற்கும் குறைவான நெல்லினை பிறிதாக இனங்காண வேண்டும். இந்தத் தரங்களுக்கமைய வழங்கப்படும் நெல்லினை பின்வரும் விலைகளில் கொள்வனவு செய்ய வேண்டும்.

(i) உரிய தரத்திலான ஒரு கிலோ கிராம் நெல் - ரூபா 50.00 ப்படி

(ii) ஈரலிப்புத் தன்மை 14% த்தை தாண்டும் எனினும் 22% ற்குக் குறைந்த ஒரு கிலோ கிராம் நெல் - ரூபா 44.00 ப்படி

2.2 மேற்கூறிய விலைகளுக்கமைய பின்வரும் வழிமுறைகளுக்கமைய நெல் கொள்வனவு நடைமுறைப்படுத்தப்படும்.

(i) நெல் சந்தைப்படுத்தும் சபையினால் உரிய தரத்திலான நெல்லினை கொள்வனவு செய்தல்.

உரிய தரத்திலான ஒரு கிலோ கிராம் நெல்லினை தலா 50.00 ரூபாப்படி ஆகக் குறைந்தபட்ச விலையில் நெல் சந்தைப்படுத்தும் சபை கொள்வனவு செய்யும். அவ்வாறு கொள்வனவு செய்யும் நெல்லுக்காக விவசாயியின் பெயரில் பெறுமதி குறிப்பிடப்பட்ட செலுத்தல் சான்றிதழ் ஒன்று நெற் சந்தைப்படுத்தும் சபையினால் வழங்கப்படும். அந்தச் செலுத்தல் சான்றிதழ் நெல் சந்தைப்படுத்தும் சபையின் தலைவரினால் அதிகாரம் கையளிக்கப்படும் உத்தியோகத்தர் மற்றும் மாவட்டச் செயலாளரினால் அதிகாரமளிக்கப்படும் உத்தியோகத்தர் ஆகிய இருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.

அந்தச் செலுத்தல் சான்றிதழ் இலங்கை வங்கி, மக்கள் வங்கி அல்லது பிரதேச அபிவிருத்தி வங்கியின் குறிப்பிட்ட கிளைகளுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன்,

அந்த வங்கிகள் குறிப்பிட்ட பணத்தை விவசாயியின் வங்கிக் கணக்கில் உடனடியாக வைப்பு செய்யும்.

(ii) பிரதேச செயலாளர்கள் மூலம் சிறிய நடுத்தரளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் ஊடாக தரத்திலான நெல்லுக்கு மேலதிகமாக ஈரலிப்புத் தன்மை 14% ற்கும் அதிகமான மற்றும் 22% ற்கும் குறைந்த தரத்திலான நெல்லினைக் கொள்வனவு செய்தல்.

தரத்திலான 1 கிலோ கிராம் நெல் தலா 50.00 ரூபாப்படியும் ஈரலிப்புத் தன்மை 14% த்தை தாண்டியுள்ள மற்றும் 22% ற்கு குறைவான ஒரு கிலோ கிராம் நெல் தலா 44.00 ரூபாப்படியும் நெல்லினை பிரதேச செயலாளர்கள் ஊடாக சிறிய மற்றும் நடுத்தரளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கொள்வனவு செய்ய வேண்டும். அவ்வாறு கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளை சட்டப்படியாக முன்னெடுப்பதற்காக திறைசேரியினால் அனுமதிக்கப்பட்ட இத்துடன் இணைக்கப்பட்ட (இணைப்பு 01) மாதிரிப் படிவத்திற்கமைய ஒப்பந்தமொன்று செய்து கொள்ளப்படல் வேண்டும்.

அவ்வாறு கொள்வனவு செய்யும் நெல்லுக்காக விவசாயியின் பெயரில் பெறுமதி குறிப்பிடப்பட்ட செலுத்தல் சான்றிதழ் ஒன்று நெற் சந்தைப்படுத்தும் சபையினால் வழங்கப்படும். அந்த செலுத்தல் சான்றிதழ் நெல் சந்தைப்படுத்தும் சபையின் தலைவரினால் அதிகாரம் கையளிக்கப்படும் உத்தியோகத்தர் மற்றும் மாவட்டச் செயலாளரினால்/பிரதேச செயலாளரினால் அதிகாரமளிக்கப்படும் உத்தியோகத்தர் ஆகிய இருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.

அந்தச் செலுத்தல் சான்றிதழ் இலங்கை வங்கி, மக்கள் வங்கி அல்லது பிரதேச அபிவிருத்தி வங்கியின் குறிப்பிட்ட கிளைகளுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன், அந்த வங்கிகள் குறிப்பிட்ட பணத்தை விவசாயியின் வங்கிக் கணக்கில் உடனடியாக வைப்பு செய்யும்.

குறிப்பிட்ட தரத்திற்கு ஏற்றவாறு அல்லாத எனினும் ஒரு கிலோ கிராம் தலா 44.00 ரூபாப்படி கொள்வனவு செய்யப்படும் நெல்லினை உரிய தரத்திற்கமைய உலர வைப்பதற்காக தனியார் துறை சார்ந்த சிறிய மற்றும் நடுத்தரளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களின் பங்களிப்பினை பெற்றுக் கொள்வதற்காக மாவட்டச் செயலாளர்கள்/ பிரதேச செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இதன்போது நெல்லினை

உலர வைப்பதற்காக ஏற்படும் செலவுக்காக ஒரு கிலோ கிராம் நெல்லுக்கு தலா ஆகக் கூடியது 4.00 ரூபா வீதம் தனியார் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு செலுத்தல்களை செய்ய வேண்டும்.

(03) நெல் கொள்வனவு செய்யப்படும் பிரதேசங்களில் அமைந்துள்ள இந்த வேலைத்திட்டத்திற்கான பிரதான நெல் வழங்குநர்களாக செயற்படும் வங்கிக் கிளைகள் மாவட்ட செயலாளர்கள் கோரும் சேவையை வழங்குவதற்காக வார இறுதி நாட்களிலும் திறந்து வைத்திருத்தல் வேண்டும்.

(04) விவசாயி ஒருவர் செய்கை மேற்கொண்டுள்ள நிலத்தின் அளவுக்கமைய கொள்வனவு செய்யக் கூடிய நெல்லின் அளவு பின்வருமாறு :

| செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள காணியின் அளவு | கொள்வனவு செய்யப்படும் ஆகக் கூடிய நெல்லின் அளவு (கிலோ கிராம்) |
|---|---|
| 1 ஏக்கர் வரை | 1,000 |
| 1 ஏக்கர் தொடக்கம் 3 ஏக்கர் வரை | 3,000 |
| 3 ஏக்கர் தொடக்கம் 5 ஏக்கர் வரை | 5,000 |

(05) கொள்வனவு செய்யபடும் நெல்லினை உரியவாறு களஞ்சியப்படுத்துவதற்காக உணவு ஆணையாளருக்குரிய அனைத்து களஞ்சியங்களையும் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு அல்லது மாவட்டச் செயலாளருக்கு கையளிக்க வேண்டும். பிரதேசத்திலுள்ள பயன்படுத்தப்படாத வேறு கட்டிடங்களையும் தேவைக்கமைய பயன்படுத்திக் கொள்வதற்கு மாவட்டச் செயலாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகின்றது. களஞ்சியப்படுத்திலின் தேவையைக் கருத்திற் கொண்டு தகுந்த கொள்கலன்களை (container) பயன்படுத்தல் போன்ற உடனடித் தீர்வுகளை பொருத்தமான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். களஞ்சியங்களுக்குத் தேவையான பாதுகாப்பு மாவட்டச் செயலாளரின் சிபார்சிற்கமைய முப்படையினரால் வழங்கப்படும். இப்பணிகளுக்காக மாவட்ட செயலாளரின் தேவைக்கமைய சிவில் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்களையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(06) இந்த வேலைத்திட்டத்திற்குத் தேவைப்படும் பொதிகள் ஈரலிப்பை அளவிடும் உபகரணங்கள் மற்றும் தராசுகள் போன்ற அடிப்படைத் தேவைகளை மாவட்ட செயலாளர்கள் மற்றும் நெல் சந்தைப்படுத்தும் சபை வழங்குதல் வேண்டும். இது தொடர்பான போக்குவரத்துச் சேவைகளுக்காக அரசு நிறுவனங்களுக்குரிய லொறிகள்

மற்றும் ட்ரக் வண்டிகள் போன்றவற்றை பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(07) இவ்வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தலை தேசிய முன்னுரிமையாகக் கருதி ஒட்டுமொத்த அரச சேவை அறுவடைப் பெறும் காலத்தில் அர்ப்பணிப்புடனும் முன்மாதிரியாகவும் செயற்பட வேண்டுமென அதிமேதகு சனாதிபதி அவர்களினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைகளை வெற்றியடையச் செய்வதற்கான மேலதிக வழிகாட்டல்கள் தேவைப்படின் செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளுராட்சி அமைச்சு அல்லது செயலாளர், மகாவலி விவசாய, நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு அல்லது செயலாளர், நிதி கொள்கை திட்டமிடல் அபிவிருத்தி அமைச்சு, தலைவர், நெல் சந்தைப்படுத்தம் சபை அல்லது பணிப்பாளர் நாயகம், (பொருளாதார கொள்கைகள் மற்றும் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு) சனாதிபதி செயலகத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

**ஒப்பம்: பி.பீ.ஜயசுந்தர**
சனாதிபதியின் செயலாளர்

பிரதிகள்:-

| | | |
|---|---|---|
| 01 | கணக்காய்வாளர் அதிபதி, கணக்காய்வாளர் திணைக்களம் - | **உரிய நடவடிக்கைகளுக்காக** |
| 02 | இராணுவத் தளபதி, இலங்கை இராணுவம் - | |
| 03 | கடற்படைத் தளபதி, இலங்கை கடற்படை - | |
| 04 | விமானப் படைத் தளபதி, இலங்கை விமானப்படை - | |
| 05 | பணிப்பாளர் நாயகம், சிவில் பாதுகாப்புத் திணைக்களம் - | |
| 06 | பணிப்பாளர் நாயகம், விவசாயத் திணைக்களம் - | |
| 07 | பணிப்பாளர் நாயகம், அபிவிருத்தி நிதித் திணைக்களம் - | |
| 08 | சமுர்தி பணிப்பாளர் நாயகம், சமுர்தி அபிவிருத்தித் திணைக்களம் - | |
| 09 | கமத்தொழில் அபிவிருத்தி ஆணையாளர் நாயகம், கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் - | |
| 10 | உணவு ஆணையாளர், உணவு ஆணையாளர் திணைக்களம் - | |
| 11 | பிரதேச செயலாளர்கள் - | |
| 12 | தலைவர், இலங்கை வங்கி - | |

| | | | |
|---|---|---|---|
| 13 | தலைவர், மக்கள் வங்கி | - | உரிய நடவடிக்கைகளுக்காக |
| 14 | தலைவர், பிரதேச அபிவிருத்தி வங்கி | - | |
| 15 | தலைவர், கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம் | - | |

இணைப்பு 01

**நெல்லினைக் குற்றி அரிசியாக்கி சதொச நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான ஒப்பந்தம்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ........................ நிருவாக மாவட்டத்தில் ..........................இலக்கமுள்ள இடத்தில் தலைமை அலுவலகமாக விளங்கும் மாவட்ட செயலகத்தின் அரசாங்க அதிபர் ................ அல்லது அவரினால் உத்தியோகபூர்வமாக பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் உள்ளடங்கும் முதலாம் தரப்பும் ........................... நிருவாக மாவட்டத்தில் ...................................... முகவரியில் தலைமை வர்த்தக நிலையத்தை நடத்தி வரும் ................................. (அரிசி ஆலையின் பெயர்) ...................................... (அரிசி ஆலை உரிமையாளரின் பெயர்) (தேசிய அடையாள அட்டை இல) ................................ ற்கு அல்லது அந்த அரிசி ஆலை உரிமையாளருக்குரிய உரித்தாளர்கள், மரணச்சாதன தத்துவகாரர்கள், அற்றோனித் தத்துவகாரர்கள் உள்ளடங்கும் இரண்டாந் தரப்பும் 2019/20 பெரும்போகத்தில் அரசின் நெல் கொள்வனவு வேலைத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டு தற்போது முதலாம் தரப்பின் பொறுப்பில் இருக்கும் நெல்லினை குற்றி அரிசியாக்கி இலங்கை சதொச நிறுவனங்களுக்கு விற்கும் செயற்பாடு தொடர்பாக இங்கு கீழ்க்குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க ஒப்பந்தம் செய்து கொண்டு பின்வருமாறு கையெழுத்திட்டு செய்து கொள்ளப்படும் உடன்படிக்கையாகும்.

01. முதலாம் தரப்பினரால் 2019/20 பெரும்போகத்தில் கொள்வனவு செய்த நெல்லினை முதலாம் தரப்பினரின் தேவைக்கமைய நெல்லினைக் குற்றி அரிசியாக்கி லங்கா சதொச நிறுவனங்களுக்கு வழங்கும் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் நெல்லினை இரண்டாந் தரப்பினருக்கு வழங்க முதலாம் தரப்பினர் இணங்குகின்றனர்.

02. இரண்டாம் தரப்பினரால் மிகவும் உயர்ந்த மட்டத்தில் அந்த நெல்லினைக் குற்றித் தயாரித்த அரிசியை தமது ஆலையில் இருந்து ஆலைக்கு மிக அருகிலுள்ள லங்கா சதொச நிறுவனத்தின் களஞ்சியங்களிடம் (வீரவெல/ வெலிசர/ என்டேரமுள்ள) முறையாக கையளித்தல் வேண்டும்.

03. நெல்லினைக் குற்றி நன்கு தயாரிக்கப்பட்ட அரிசியின் தரம் பின்வருமாறு இருக்கக் கூடிய வகையிலான நடவடிக்கைகளை இரண்டாம் தரப்பு மேற்கொள்ள வேண்டும்.

(அ) அரிசி மனிதர்களின் பாவனைக்கு தகுந்த சிறந்த நிலையில் இருக்க வேண்டுமென்பதுடன், எத்தகைய துர்நாற்றமும் இல்லாத புதிய அரிசியாக இருத்தல் வேண்டும்.

(ஆ) அரிசி முற்றாக கிருமிகள் மற்றும் பூச்சிகள் என்பவற்றின் தாக்கத்திற்குட்படாதவைகளாக இருக்க வேண்டும்.

04. வழங்கப்பட்ட நெல்லில் அரிசியாக்கும் வீதம் கீரிசம்பாவிற்கு 60% மாகவும் ஏனைய வகைகளுக்கு 65% வீதமாகவும் கருதப்பட்டு குறிப்பிட்டளவு கணக்கிடப்பட்டு லங்கா சதொச நிறுவனத்தின் மேல் இரண்டாம் இலக்கத்தின் கீழ்க் குறிப்பிட்டுள்ள மிக அருகில் உள்ள களஞ்சியத்திற்கு ஒப்படைக்க இரண்டாந் தரப்பு உடன்படுகிறது.

05. இரண்டாம் தரப்பினரால் பதனிடப்பட்ட அரிசியை லங்கா சதெச நிறுவனத்திற்கு ஒப்படைப்பதற்கு முன்னர் முதலாம் தரப்பினரின் பூர்வாங்க அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதுடன், அந்த அரிசியை லங்கா சதொச நிறுவனத்திற்கு ஒப்படைத்ததன் பின்னர் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை (GRN) முதலாவது தரப்பினருக்கு சமர்ப்பித்ததன் பின்னர் அதன் முதலாம் தரப்பு மற்றும் இரண்டாம் தரப்பிற்கு வழங்கிய நெல் தொடர்பாக நெல்லினைக் குற்றி அரிசியாக்குவதற்கான கூலி, போக்குவரத்துச் செலவு மற்றும் மேற்கொள்ளப்பட்ட இதர செலவுகளை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் முதலாம் தரப்பினரால் இரண்டாம் தரப்பினருக்கு குறிப்பிட்ட பணம் செலுத்தப்படும். அரிசியை ஏற்றிச் செல்வதற்கான செலவினைக் குறைத்துக் கொள்ளும் வகையில் பெரும் எண்ணிக்கையிலான நெல்லினை ஒரே தடவையில் ஏற்றிச் செல்ல வேண்டும். இதன்படி நெல்லினைக் குத்துதல், ஏற்றிச் செல்லுதல் உட்பட ஏனைய கருமமாற்றும் செலவுகள் மற்றும் அரிசியை ஏற்றிச் செல்வதற்கான இரண்டாந் தரப்பினருக்கு பின்வருமாறு செலுத்தல்களைச் செய்ய முதலாம் தரப்பு நடவடிக்கை எடுக்கும்.

(அ)

| வகை | நெல்லினைக் குத்துதல், நெல்லினை ஏற்றிச் செல்லுதல் மற்றும் ஏனைய கருமமாற்றும் செலவுகள் (1 கிலோ கிராமிற்கான ஆகக் கூடியது) ரூபா |
|---|---|
| கீரிசம்பா | 8.00 |
| சம்பா வெள்ளை மற்றும் சிவப்பு | 6.40 |
| நாட்டரிசி வெள்ளை | 6.40 |
| நாட்டரிசி சிவப்பு | 5.60 |
| சிவப்பு பச்சை அரிசி | 4.50 |

(ஆ) ஒரு மெற்றிக் தொன் அரிசியை ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு ஏற்றிச் செல்ல ஆகக் கூடியது 7 ரூபா செலுத்தப்படும்.

லங்கா சதொச நிறுவனத்திற்கு அரிசியை வழங்குவதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை முகாமைத்துவம் செய்து கொள்ளலுக்கு அமைய மேலே (5) (அ) மற்றும் (5)(ஆ) வின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் கூடிய விலையை மாற்றுவதற்கு மாவட்டச் செயலாளருக்கு முடியும்.

06. இரண்டாந் தரப்பினர் முதலாம் தரப்பினரால் வழங்கப்பட்ட நெல்லிலிருந்து பெற்றுக் கொண்ட அரிசியை மாத்திரம் இலங்கை ச.தெ.ச நிறுவனத்திற்கு வழங்க வேண்டும். அதேபோன்று முதலாம் தரப்பினரால் வழங்கப்பட்ட நெல் மற்றும் தயாரிக்கப்பட்ட அரிசி கையிருப்பு மற்றும் தமது ஆலையில் தயாரிக்கப்பட்டுள்ள, களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள ஏனைய அரிசி மற்றும் நெல் கையிருப்பிலிருந்து பிரித்தெடுத்து களஞ்சியப்படுத்த வேண்டும். இந்தச் செயற்பாடு முதலாம் தரப்பினரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் மேற்பார்வை செய்யப்படும். அதேபோன்று அரிசியைத் தயாரிக்கும் செயற்பாடு இடம்பெறும் காலகட்டத்தில் முதலாம் தரப்பினரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் வந்து பரிசீலிப்பார்கள். இதற்கு இரண்டாந் தரப்பினரின் ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும்.

07. அரிசியைப் பதனிடும் முழுமையான செயற்பாடு சுகாதார விதிமுறைகளுக்கேற்ப கட்டாயம் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

08. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 24 மணித்தியாலங்களுக்குள் முதலாவது நெற் தொகையை முதலாம் தரப்பினரிடமிருந்து பெற்றுக் கொள்ள இரண்டாந் தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுடன், அதற்காக நெல்லினை விநியோகிப்பதற்கான வசதிகளை வழங்க முதலாம் தரப்பு கடமைபட்டுள்ளது. வழங்கப்படும் நெல்லின் அளவு இருதரப்பினரதும் உடன்பாட்டுடன் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

09. நெல்லினை அரிசியாக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கையின் போது குறிப்பிட்ட ஒவ்வொரு தொகை நெல்லிலிருந்து பெறப்பட்ட மாதிரியையும் மற்றும் அரிசியாக்கப்பட்டதன் பின்னர் பெற்றுக் கொண்ட மாதிரியையும் முதலாம் தரப்பினரால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியொருவருக்கு இரண்டாந் தரப்பினரால் வழங்கப்பட வேண்டும். லங்கா சதொச நிறுவனத்திற்கு இரண்டாந் தரப்பினரால் ஒப்படைக்கப்பட்ட அரிசியின் தரம் தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் எழுந்தால் ஆரம்பத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட நெல் மாதிரியையும் அரிசி மாதிரியையும் ஒப்பிடுவதன் மூலம் அதனது தரத்தை பரிசீலிக்க இரண்டு தரப்பினரும் இணங்க வேண்டும்.

10. ஏதேனுமோர் சந்தர்ப்பத்தில் லங்கா சதொச விற்கு வழங்கப்பட்ட அரிசியின் தரம் மூன்றாவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எதிர்பார்த்த மட்டத்தில் இல்லையென்று உறுதிப்படுத்தப்பட்டால் அல்லது மாதிரிகளையும் விட வேறுபட்டு காணப்பட்டால் அந்த நெல் தொடர்பாக 5வது பிரிவில் காட்டப்பட்டுள்ள எந்தவோர் பணத்தையும் இரண்டாந் தரப்பினருக்கு செலுத்தாமல் இருக்க முதலாம் தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

11. தனது ஆலையில் நெல்லினைக் குத்துவதற்கான அளவினைக் கருத்திற் கொண்டு தேவையான நெல்லினை மாத்திரம் முதலாம் தரப்பினரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் பொறுப்பு இரண்டாம் தரப்பிற்குரியதாகும். முதலாம் தரப்பினரிடமிருந்து நெல்லினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் இரண்டாந் தரப்பினரால் தயாரிக்கப்பட்ட அவித்த அரிசியை நெல்லினைப் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து மூன்று நாட்களுக்குள்ளும் பச்சை அரிசியை இரண்டு நாட்களுக்குள்ளும் லங்கா சதொச நிறுவனத்திற்கு வழங்கும் செயற்பாட்டை ஆரம்பிக்க வேண்டும்.

12. நெல்லினைக் குத்துதல் மற்றும் லங்கா ச.தொ.ச நிறுவனத்திற்கு அரசியை ஏற்றிச் சென்று ஒப்படைக்கும் பொறுப்பு இரண்டாம் தரத்திற்குரியதாகும்.

13. இரண்டாந் தரப்பினரால் இந்த ஒப்பந்தத்தின் கீழ் முதலாம் தரப்பினரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் நெல்லினை மற்றும் அந்த நெல்லைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் அரிசி 1982 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க பொது சொத்துக்கள் சட்டத்தின் கீழ் கருதப்படும் ஒரு பொதுச் சொத்தாகும்.

14. இச்செயற்பாட்டின் போது இரண்டாந் தரப்பினரால் இவ்ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் மீறப்பட்டால் முதலாம் தரப்பினரால் 1982 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் அல்லது இலங்கையில் நடைமுறையிலிருக்கும் வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

15. இரண்டாந் தரப்பினரால் முதலாம் தரப்பினரிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் நெல்லுக்காக குறிப்பிட்ட அரிசியை லங்கா சதொச நிறுவனத்திற்கு ஒப்படைத்து முடியும் வரை அவ்வாறு வழங்கப்பட்ட அரிசிக்காக முதலாம் தரப்பினரால் இரண்டாம் தரப்பினருக்கு குறிப்பிட்ட பணம் செலுத்தி முடியும் வரை இந்த ஒப்பந்தம் செல்லுபடியாகும்.

இந்த ஒப்பந்தத்தின் தரப்பினரால் மேல் குறிப்பிடப்பட்டவாறு ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு தமது கையெழுத்துக்களை இட்டுள்ளார்கள்.

…………. ஆம் ஆண்டு ………………….. மாதம்………….ஆந் திகதி ……………..
முதலாம் தரப்பினரின் அலுவலகத்தில் கையொப்பமிடப்பட்டது.

| | |
|---|---|
| …………………………………. | ……………………………………… |
| முதலாம் தரப்பு (அரச அதிபர் அல்லது அவரது பிரதிநிதி) | ஆலை உரிமையாளர் |
| மாவட்டச் செயலகம் | பெயர் : ……………………………… |
| ……………………………………… | விலாசம் : …………………………… |

**சாட்சியாளர்களின் ஒப்பத்திற்கான சாட்சி :**

முதலாம் தரப்பு / அரச அதிபர்

ஆலை உரிமையாளர்

01. பெயர்: ……………………..
    தே.அ.அ.இல: ……………..
    விலாசம் :…………………..
    ………………………………..
    ………………………………..
    ஒப்பம்:………………………

02. பெயர்: ………………………
    தே.அ.அ.இல:………………..
    விலாசம் :…………………..
    ………………………………..
    ………………………………..
    ஒப்பம் : ……………………

02. பெயர்: ……………………..
    தே.அ.அ.இல: ……………..
    விலாசம் :…………………..
    ………………………………
    ………………………………
    ஒப்பம்:……………………..

04. பெயர்: ………………………
    தே.அ.அ.இல:………………..
    விலாசம் :…………………..
    ………………………………
    ………………………………
    ஒப்பம்: ……………………